பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 01 2026 6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, தில்லியில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இல்லத்தில் இன்று நடைபெறும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

2. வேளாண் துறையையும் விவசாயிகளையும் மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் இத்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. பொங்கல் பண்டிகையை ஒட்டி சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு அதிக பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. திமுக அளித்த தேர்தல் வாக்குறுதியின்படி, ஜல்லிக்கட்டு காளைகள் வளர்ப்போருக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ராஜ்கோட்டில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தில்லியில் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இல்லத்தில் இன்று நடைபெறும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இது தொடர்பாக தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் எல். முருகன், தமிழ் மீதும், தமிழ்க் கலாச்சாரத்தின் மீதும் பிரதமர் திரு நரேந்திர மோடி தீவிர பற்று கொண்டிருப்பதாகக் கூறினார்.

(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 65 செகண்ட்ஸ்)

<<<<>>>>

வேளாண் துறையையும் விவசாயிகளையும் மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் இத்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பொங்கல், மகரசங்கராந்தி, ஹோகிரி, உள்ளிட்ட பண்டிகைகளையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நம் நாட்டில் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்படும் இந்தப் பண்டிகைகள், பயிர் அறுவடையைக் குறிப்பதுடன் இயற்கையை போற்றுவதாக அமைந்துள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

‘‘சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை’’ என்ற திருவள்ளுவரின் திருக்குறள் விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பாத அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளின் வருமான பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்களுக்கான கடன்களை எளிதாக்கவும், மண் வளம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தவும், பயிர்களுக்கு காப்பீடு வழங்கவும், சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இவை வேளாண்துறையின் மேம்பாட்டுக்கான அரசின் உறுதிப்பாட்டை எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வருகிறார்.

நாளை திருப்பூரில் மக்களுடன் இணைந்து பொங்கல் பண்டிகையை அவர் கொண்டாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கோவையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கவுள்ளார்.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையின் முதல் நாளான இன்று போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

பழையனவற்றை அகற்றி, வீடுகளைத் தூய்மை செய்து பொங்கல் பண்டிகைக்குத் தயாராகும் வகையில் போகி கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் பழைய பொருட்கள், பிளாஸ்டிக் கழிவுகள், டயர்கள் போன்றகவற்றை போகியின் போது தீயிட்டுக் கொளுத்த வேண்டாம் என்றும், பாதுகாப்பாக அப்புறப்படுத்துமாறும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

இன்றைய தினம் சென்னையில் 15 இடங்களில் காற்றின் தரம் கண்காணிக்கப்பட்டு அதன் அளவு இணையதளத்தில் வெளியிடப்படும் என்று அந்த வாரியம் கூறியுள்ளது.

இதனிடையே போகிப் பண்டிகையின்போது புகைமூட்டம் அதிகரிக்கக் கூடும் என்பதால், சென்னையில் சில விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், சிலவற்றின் நேரம்

மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விமானங்கள் இயக்கப்படுவது குறித்த தற்போதைய தகவல்களை அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையை ஒட்டி சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு அதிக பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

சென்னை கிளாம்பாக்கத்தில் நேற்றிரவு செய்தியாளர்களிடம் பேசிய அவர், பண்டிகை காலங்களில் அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிப்போரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறினார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த 6 நாட்களில் 6 லட்சத்து 5 ஆயிரம் பேர் சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு பயணித்திருப்பதாகவும், நேற்று ஒரே நாளில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் பேர் பயணித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை தடுக்க கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், சென்னையில் கூடுதல் கட்டணம் வசூலித்த 30 ஆம்னி பேருந்து நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிவசங்கர் கூறினார்.

இதனிடையே சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும், பயணிகளின் வசதிக்காக உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Sureka - 44 Sec)**

<<<<>>>>

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதியின்படி, ஜல்லிக்கட்டு காளைகள் வளர்ப்போருக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஜல்லிக்கட்டுக் காளைகளை வளர்ப்போருக்கு ஊக்கத்தொகையாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று திமுக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நான்கரை ஆண்டுகளாக மாதந்தோறும் இந்த தொகையை வழங்காத தமிழக அரசு, இப்போதாவது அதை வழங்குமா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனிடையே சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திரு நயினார் நாகேந்திரன், பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 23-ம் தேதி சென்னைக்கு வரவுள்ளதாகக் கூறினார்.

அன்றைய தினம் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்களின் கூட்டத்தில் திரு நரேந்திர மோடி கலந்து கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனின் மின் கட்டமைப்புகள் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்.

---------------

ஐரோப்பிய யூனியனின் புதிய வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராக பிரான்ஸ் தலைநகர் பாரீசில் விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

---------------

ஜப்பானிய வாள்வீச்சுக் கலையான கென்ஜுட்சுவில் ஆந்திர துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் பெற்றுள்ள அங்கீகாரத்திற்காக அவருக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

---------------

பிரதமரின் பிரகதி திட்டத்தின் மூலம், இதுவரை 85 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள 382 பெரிய திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவை விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

---------------

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டத்தால் மின்சார வாகன உற்பத்தித் துறையில் கடந்த ஆண்டில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட்டதுடன் அதிக வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

---------------

மகாராஷ்டிராவில் மும்பை மாநகராட்சி உட்பட 29 நகர்ப்புற உள்ளாட்டசி அமைப்புகளுக்கு நாளை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதற்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

---------------

விருதுநகரில் தமிழ்நாடு பூமிதான வாரிய நிலத்தில் நிலமற்ற ஏழை விவசாயிகள் வீடு கட்டுவதற்கான வீட்டுமனைப் பத்திரங்களை மாநில அமைச்சர்கள் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு வழங்கினர்.

---------------

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே யானைத் தந்தங்களை பதுக்கி சட்டவிரோதமாக விற்பனை செய்ய முயன்ற மூன்று பேரை வனத்துறையினர் கைது செய்து தந்தங்களைப் பறிமுதல் செய்தனர்.

---------------

ஈரோட்டில் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஆட்சியர் திரு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றனர்.

---------------

சென்னை மாதவரம் மற்றும் மணலி ஏரிகளில் அமைக்கப்பட்டுள்ள படகு குழாமை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு மக்கள் பயன்பாட்டுக்குத் தொடங்கி வைத்தார்.

---------------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராஜ்கோட்டில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**